# UNITED NATIONS

**Press Release**

---

## இலங்கையின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைக்கு நீடித்து நிலைத்திருக்கும் தீர்வுகளின் அவசியத்தை ஐ.நா. நிபுணர் வலியுறுத்துகிறார்

*ஜெனீவா மற்றும் கொழும்பு, 2007 டிசெம்பர் 27 –*

“இலங்கை, சர்வதேச சமூகத்தின் முக்கியமான உதவிகளுடன், 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினருக்குப் புனர்வாழ்வு அளித்திருப்பதுடன் 2006இல் உள்நாட்டு மோதல்கள் உக்கிரமடைந்தமைத் தொடர்ந்து இடம்பெயர்ந்தவர்களுக்கும் கணிசமான உதவிகளை வழங்கியுள்ளது. 2006 ஏப்பிரல் மாதத்திற்கும் 2007 மார்ச் மாதத்திற்கும் இடையே கிழக்கு மாகாணத்தில் தமது வீடுகளைவிட்டுத் தப்பியோடிய 220,000க்கும் மேற்பட்டவர்களில் அநேகமானோர் இப்பொழுது திரும்பிச் சென்றுள்ளதோடு, அவர்களுக்கு இடைக்கால வசிப்பிடங்கள் வழங்கப்பட்டு அவர்கள் தமது முன்னைய வாழ்க்கையை மீளப்பெறத் தொடங்கியுள்ளனர். ஏற்கனவே ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பாராட்டுக்குரியவை. அதேசமயத்தில், இந்த மீளக்குடியமர்வுகள் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் நிலைத்திருக்க வேண்டுமாயின், இந்த நடவடிக்கைகள் பாதுகாப்பு, ஜீவனோபாயம், மனிதநேய உதவித் தொடர்பு ஆகிய விடயங்களில் சர்வதேச மனித உரிமைத் தரநியமங்களுக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஐக்கிய நாட்டு வழிநாட்டு நெறிமுறைகளுக்கும் அமைவானவையாக இருப்பது அவசியம்.” உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் காலின் தனது எட்டு நாள் இலங்கை விஜயத்தின் முடிவில் வெளியிட்ட கருத்துக்களின் சாராம்சம் இதுவாகும்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க இங்கு வந்திருந்த திரு. காலின் டிசெம்பர் 14ஆம் திகதிக்கும் 21ஆம் திகதிக்கும் இடையே தனது விஜயத்தினை மேற்கொண்டார். கொழும்பில் அமைச்சர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்த அவர், புத்தளம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கும் விஜயம் செயதிருந்தார். கிளிநொச்சிக்குச் சென்று மனிதநேய மற்றும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ.) இயக்கத்துடன் பேச முடியாமற்போனமை குறித்து அவர் கவலை தெரிவித்தார். திரு. காலின் தாம் விஜயம் செய்த பிரதேசங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், மீளக் குடியமர்ந்தவர்கள், சமூக மற்றும் மதத் தலைவர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச பாதுகாப்பு அதிகாரிகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஐக்கிய நாட்டு முகவரகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குப் பாதுகாப்பையும் உதவிகளையும் வழங்குவது இலங்கை அரசாங்கத்தின் தலையாய கடமை என்பதை வலியுறுத்திய திரு. காலின், இடம்பெயர்ந்த மக்கள் நிலையான தீர்வுகளைப் பெறக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்புக்களில் அடங்கும் என்று குறிப்பிட்டார். இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை சிக்கல் வாய்ந்ததாகும். கடந்த 24 மாதங்களில் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வுகளுக்கு மேலாக, வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 17 ஆண்டுகளாக புத்தளத்தில் தங்கியுள்ளனர். வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள சில இடங்களில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தொடர்ந்து நீடிக்கிறது. கிழக்கு மாகாணத்தில் சுனாமியினால் இடம்பெயர்ந்த ஒரு சிறிய தொகையினரின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. மேலும் மன்னாரிலும் வடக்கிலுள்ள வேறு சில இடங்களிலும் புதிய இடப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன.

சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெவ்வேறாக இருந்தபோதிலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் திரும்பிச் சென்றவர்கள் பொதுவாக எதிர்நோக்கும் சில முக்கிய பிரச்சினைகளை திரு. காலின் அவர்கள் இனம் கண்டுள்ளார். உடல் ரீதியான பாதுகாப்பே அவர்களின் பிரதான கவலையாகும். மக்கள் மத்தியில் அச்ச உணர்வு நிலவுகின்றது. வெவ்வேறு விதமான அச்சுறுத்தல்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து எதிர்நோக்கப்படுகின்றன. பின்வருவன அவற்றில் அடங்கும்: எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினரின் ஊடுருவலும் தாக்குதல்களும்; தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) போன்ற ஆயுதக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல், கொள்ளை, பயமுறுத்தல், தனிப்பட்டவர்கள் மீதான தாக்குதல்கள், இரவு வேளையில் முகாம்களுக்குள் ஊடுருவல் ; நிலக்கண்ணிகள் பூரணமாக அகற்றப்படாமை அல்லது அகற்றுவதில் தாமதம்; பாதுகாப்பு அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைத்துத் தேடுதல்கள், சந்தேகநபர்களை அடையாளம் காணும் வழிமுறைகள், குடும்பத்தினருக்கு அறிவிக்காமலும் காரணம் கூறாமலும் தனிப்பட்டவர்களைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்தல்; இடம்பெயர்ந்தவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்துத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளையிட்டு சிவிலியன் பொலிசார் போதிய நடவடிக்கை எடுப்பதில் உள்ள சவால்கள்; உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் திரும்பிச் சென்றவர்களின் மூல இருப்பிட ஆவணங்கள் மற்றும் விசாரணை அறிக்கைகளை அடிப்படையாக வைத்து அவர்களின் நடமாட்டச் சுதந்திரத்தை வரையறை செய்தல். மேற்படி பாதுகாப்பு விடயங்களில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தும் சட்ட ரீதியான உரிமையும் கடமையும் அரசாங்கத்திற்கு உள்ளது. இதனைத் தெளிவாக ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், முன்பு எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் என்ற காரணத்தினால் தாம் சந்தேகத்திற்கும் இடர்களுக்கும் உள்ளாக்கப்படலாம் என்ற அச்ச உணர்வுடன் முழுச் சமூகமும் வாழ்வதையும் பிரதிநிதி அவர்கள் அவதானித்துள்ளார். பிரதேசத்திலுள்ள தமிழ் பேசும் இளைஞர்களை சிவிலியன் பொலிஸ் படைக்குச் சேர்த்துக்கொள்ளுதல், சிவில்-இராணுவ இணைப்பு அதிகாரிகளை நியமித்தல் போன்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்து திரு. காலின் மிகுந்த வரவேற்புத் தெரிவித்தார். மீளக்குடியமர்வு இடம்பெற்றுள்ள பிரதேசங்களில் வெவ்வேறு இனப் பிரிவுகளுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் திரும்பிச் சென்றவர்களின் இரண்டாவது முக்கிய பிரச்சினை ஜீவனோபாய வாய்ப்புக்களாகும். “தற்போது பாதுகாப்பு விடயங்களுக்கும் மனிதநேய விடயங்களுக்கும் இடையே இழுபறி நிலைமை காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு இடமளிக்கும் பொருட்டு இரு விடயங்களுக்குமிடையே சிறந்த சமநிலை பேணப்பட வேண்டும்” என்று திரு. காலின் தெரிவித்தார். கணிசமான அளவு கட்டுப்பாடுகள் நிலவுகின்றன என்று குறிப்பிட்ட அவர், ஜீவனோபாயத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அரச அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். சில கட்டுப்பாடுகள் அதிகாரிகளினால் விதிக்கப்பட்டவை. வயல்கள் அல்லது மீன்பிடி பிரதேசங்களுக்குச் செல்ல விதிக்கப்பட்டிருக்கும் தடை இதற்கு உதாரணமாகும். வேறு சில தடைகள் பாதுகாப்புக் காரணத்துடன் தொடர்புடையவை. வயல்களில் இடம்பெறக்கூடிய தாக்குதல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள், சோதனைச் சாவடிகளில் இடம்பெறக்கூடிய துன்புறுத்தல்கள் என்பன இதற்கு உதாரணங்களாகும். ஜீவனோபாய உதவியாக விதைபொருள்கள், உபகரணங்கள் முதலியவற்றை வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், இடம்பெயர்ந்த மக்கள் மீளத் திரும்பும் வேளையில் அவை கிடைக்கத்தக்கதாக இத் திட்டங்கள் சரிவர ஒருங்கிணைத்து அமுலாக்கப்படுவதில்லை. கிழக்கிலுள்ள முகாம்களில் தொடர்ந்து தங்கியிருப்பவர்களுக்கு ஜீவனோபாய வசதிகள் எதுவும் வழங்கப்பட்டதாக தாம் கேள்விப்படவில்லை என்று திரு. காலின் கூறினார். விதவைகளும் ஏனைய குடும்பப் பொறுப்பைச் சுமக்கும் ஏனைய பெண்களும் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர் என்று அவர் கவலை தெரிவித்தார்.

அரசாங்கம், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுடனும் சர்வதேச சமூகம் மற்றும் முகவரங்களுடனும் தகவல் பரிவர்த்தனை மற்றும் ஆலோசனைகளை அதிகரித்துக்கொண்டால், மீளக்குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளில் பாதுகாப்பின்மை உணர்வைத் தணிக்கவும் மீளிணைப்பிற்கான வசதிகளை ஏற்படுத்தவும் உதவியாக இருக்கும் என்பது திரு காலின் அவர்களின் அபிப்பிராயமாகும். உதாரணமாக, தனிநபர்கள் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்படும்போது, அது குறித்து சர்வதேச மனித உரிமைத் தராதரங்களுக்கு அமைய உரிய வேளையில் முழுமையான தகவல்கள் அறிவிக்கப்படுமாயின், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் அச்ச உணர்வும்

நிர்க்கதி மனோநிலையும் தணிவதற்கு இடமுண்டு. திரும்பிச் செல்பவர்களுக்கு உள்ள வாய்ப்புக்கள், வழங்கப்பட இருக்கும் உதவிகள், மீள்குடியமர்வு நடைமுறைகள் என்பன பற்றிய தெளிவான தகவல்கள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டால், இடம்பெயர்ந்த மக்கள் தாமாகவே முன்வந்து சரியான தீர்மானத்தை எடுக்கக்கூடிய நிலையில் இருப்பார்கள். தற்போது, உயர் பாதுகாப்பு வலயத்திலும் பாதுகாப்புப் படைகளின் தனிப்பட்ட கட்டுப்பாட்டிலும் உள்ள வீடுகள் மற்றும் காணிகள் தொடர்பாகவோ அவற்றின் இழப்பிற்கான நட்டஈடு பற்றியோ தெளிவான தகவல்கள் இல்லை. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தமது எதிர்காலம் பற்றி முடிவுசெய்வதற்கு இத்தகைய தகவல்கள் அவர்களுக்குத் தேவை. கூடுதலான வெளிப்படையான தன்மை (மீள்குடியமர்த்தல் குறித்து அரசாங்கத்திற்கும் சர்வதேச முகவரகங்கள், மனிதநேய அமைப்புக்கள் என்பவற்றிற்கும் இடையே முன்கூட்டியே சிறந்த தகவல் பரிமாற்றம்) நிலவுமாயின், இடம்பெயர்ந்தவர்களுக்கான மனிதநேய உதவிகளை போதிய அளவிலும் உரிய வேளையிலும் வழங்குவதற்குப் பேருதவியாக அமையும்.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற பிரதேசங்களுக்குச் செல்ல பல மனிதநேய அமைப்புக்களுக்குப் பூரண அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், சில அமைப்புக்களுக் அங்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு உண்மையான பாதுகாப்புக் காரணங்கள் இருக்கலாம். எனினும், இத்தகைய தடை மிகவும் அரிதாக இடம்பெறும் ஒரு விதிவிலக்காக மட்டுமே இருக்க வேண்டும். மேலும், இத்தகைய அனுமதி அல்லது தடை தொடர்பாக மத்திய மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள், சில சமயங்களில், பிரதேசத்திலுள்ள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுதில்லை. இதனால், மனிதநேய அமைப்புக்கள் நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. பொருளுதவி வழங்கும் அமைப்புகளைவிட மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் சில மேலதிக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றன."பாதுகாப்பு வழங்கும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் முகவரகங்களுக்கு மக்களுடன் தொடர்புகொள்ளச் சிறந்த வசதிகளை வழங்கப்படுமாயின், இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வை மேம்படுத்த அது உதவும்." என்று திரு. காலின் குறிப்பிட்டார். மனிதநேயப் பணியாளர்களின் கடத்தல்கள், கொலைகள், அவர்களுக்கு விடுக்கப்படும் மிரட்டல்கள், ஐக்கிய நாட்டு வாகனங்கள் சோதனையிடப்படுதல், மனிதநேய அமைப்புக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுதல், சில பொலிஸ் அதிகாரிகளின் அசமந்தமான போக்கு போன்ற சம்பவங்கள் குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

1980களிலும் 1990களிலும் இடம்பெயர்ந்து இன்னமும் இடம்பெயர்ந்தவர்களாகவே இருக்கும் 300,000க்கு மேற்பட்ட மக்களின் நிலைமை பற்றி குறிப்பிட்ட திரு. காலின், அவர்களுக்கு முறையான இருப்பிடம், ஜீவனோபாய வாய்ப்பு என்பவற்றை ஏற்படுத்திக்கொடுத்து வழமையான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும், அவர்கள் தமது முன்னைய இடங்களுக்குச் சென்று தமது சொத்துக்களைப் பெற்றுக்கொள்ள கொண்டிருக்கும் உரிமையைப் பாதுகாப்பதும் இரு வேறுபட்ட விடயங்களல்ல. வடபகுதி முஸ்லீம்கள் எதிர்நோக்குவதைப் போன்ற இத்தகைய நீண்டகாலப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண்பதன் முக்கியத்துவத்தை பல அரசாங்க அதிகாரிகள் உணர்ந்திருப்பது குறித்து திரு. காலின் மகிழ்ச்சி தெரிவித்தார். அரசாங்கமும் சர்வதேச சமூகமும் இவ் விடயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கிழக்கில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீளக்குடியமர்ந்தவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்த திரு. காலின், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் புதிய இடப்பெயர்வுகளைத் தவிர்க்கும் வகையில் சமாதானத் தீர்வுகளைக் காணும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்தார். அத்தகைய தீர்வுகள் சாத்தியமாகாத பட்சத்தில், பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அவர் கேட்டுக்கொண்டார்:

(1) பாதுகாப்பின் நிமித்தம் குடிமக்களின் இடப்பெயர்வு தவிர்க்க முடியாத பட்சத்தில், அவர்களின் பாதுகாப்பான வெளியேற்றத்திற்குச் சர்வதேச மனிதநேயச் சட்டத்திற்கு அமைவான வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.
(2) இவ்வாறு வெளியேறுவோரைப் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வரவேற்று, அவர்களுக்கான உடனடி வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க பாதுகாப்பு மற்றும் சிவில் அதிகாரிகள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.
*(3)* திரும்பிச் செல்வதற்கு அல்லது மீள்குடியேற்றத்திற்கு நிலைமைகள் சாதகமாகும்போது, இடம்பெயர்ந்த மக்கள் தமக்கென முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு வழிகளில் ஒன்றை நன்கு அறிந்துகொண்டு சுயவிருப்பின் பேரில் தெரிவுசெய்ய இடமளிப்பதோடு, அதனை பாதுகாப்பான முறையிலும் கௌரவமாகவும் நடைமுறைப்படுத்த

வேண்டும். இந்த நடைமுறையின்போது, *உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான வழிகாட்டு நெறிகளில்* தெரிவிக்கப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைத் தராதரங்கள் பின்பற்றப்படடுவது அவசியம்.

தனது ஆய்வுப் பணிகளுக்கு அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் உதவிகளுக்கும் நன்றி தெரிவித்த திரு. காலின், தனிப்பட்டவர்களுடனும் சமூகங்களுடனும் அந்தரங்கமான முறையில் கலந்துரையாடித் தகவல்களைப் பெற சுயாதீன நிபுணர்களுக்கு இடமளிக்கும் கோட்பாடு பூரணமாக மதிக்கப்படுவது அவசியம் என்று குறிப்பிட்டார். குறிப்பாக, பேரிடர் முகாமை மற்றும் மனித உரிமைகள் அமைச்சிற்கு விஜயம்செய்ய தமக்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்கு அவர் நன்றி கூறினார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பாகவும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் பிரச்சினைகள் இருப்பதை ஒப்புக்கொள்ளவும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக தனது சிபாரிசுகளை நிறைவேற்றவும் அரசாங்க அதிகாரிகள் முன்வந்தமை குறித்து திரு. காலின் திருப்தி தெரிவித்தார். அரசாங்கத்துடனான ஒத்துழைப்பைத் தொடர்வதற்கும் நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ளவர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண உதவி வழங்குவதற்கும் தாம் விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

"நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வுகளின் பயனாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களும் மீளக்குடியமர்ந்தவர்களும் தமது மனித உரிமைகளைப் பூரணமாக அனுபவிப்பார்கள். அது மாத்திரமன்றி, நாட்டின் உறுதிப்பாட்டிற்கும் அது வழிகோலும். இத் துறையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகவும் அமையும்" என்று திரு. காலின் தனது விஜயத்தின் முடிவில் குறிப்பிட்டார். திரு. காலின் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்குமான தனது சிபாரிசுகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிடம் சமர்ப்பிப்பார்.

*திரு. காலின், 2004ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிபாரிசிற்கு அமைய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவர் இந்த பதவி அதிகாரத்திற்கேற்ப, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஒவ்வொரு வருடமும் மதிப்பீடுகளை மேற்கொள்கிறார். அவர் இப் பதவியை ஏற்ற பின், பல நாடுகளுக்கு விஜயம் செய்து தனது பணிகளை நிறைவேற்றியுள்ளார். அவரது அண்மைய இலங்கை விஜயமும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு, அஸர்பைஜான், ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளுக்கான விஜயங்களும் இதிலடங்கும். மேலதிக விபரங்களுக்கு: http://www2.ohchr.org/english/issues/idp/index.htm*

*ஊடக உதவிகளுக்குத் தொடர்புகொள்ளவும்: OHCHR-Media Unit, tel: +41 22 917 93 83/9602, email: press-info@ohchr.org*